1994 மார்ச் 22]

66—

பொள்ளாச்சி ஒன்றியம், இராமப்பட்டிணத்தில் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை

***10962**—திரு. நா. சா. பழனிசாமி :*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா -

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், இராமப்பட்டிணம் மாப்பிள்ளை கவுண்டன்புதூர் இணைப்புச்சாலையில் இராமப்பட்டிணத்தில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லி விட்டார்கள். இந்த பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் அதுவும் கேரளா எல்லையையொட்டியுள்ள இந்தக் கிராமங்களில் கேரளாவை நோக்கி ஓடுகின்ற பல சிற்றாறுகள் கிராமங்களுக்கிடையே செல்லுகின்ற காரணத்தினால், இரண்டு ஊர்களுக்கு இடையிலே செல்வதற்கு மக்கள் பல சிரமங்களைச் சந்திக்கிறார்கள். அந்த வகையிலே இந்த மாப்பிள்ளைக்கவுண்டன்புதூர்-இராமப்பட்டிணம் இணைப்புப் பாலம் பெரிய அளவிலே செலவழித்துக் கட்டாவிட்டாலும் தரைமட்டப் பாலம் என்ற அளவிலேயாவது கட்டி, இப்படிப்பட்ட கிராமங்களுக்கு இடையே இருக்கின்ற அந்த இணைப்புச் சாலைகளை மக்கள் பயன்படுத்தவும், அதன்மூலமாக பேருந்து வசதிகள் ஏற்படுத்தவும் தரைமட்டப் பாலத்தையாவது அமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படிப் பாலங்கள் கட்டுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம், 30 இலட்சம், 55 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இது ஊராட்சியினுடைய சாலைகள் பகுதி-2 திட்டத்தின் கீழோ அல்லது மற்றத் திட்டங்களிலோ சேர்க்கப்படவில்லை. ஆகவே, தற்போது அதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 50 இலட்சம், 25 இலட்சம் என்று செலவழித்துக் கட்டுகின்ற பாலத்தை ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் நிச்சயமாக எப்போதும் கட்ட இயலாது. ஏனென்றால், ஊராட்சி ஒன்றியங்களில் நிதி வசதி என்பதே, அன்றாட

[1994 மார்ச் 22

நிர்வாகத்துக்குக்கூட இல்லாத நிலையில், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அதை நெடுஞ்சாலைத் துறையிலே அந்த சாலையை எடுத்துக்கொண்டு, அந்தப் பாலத்தைத் தரைமட்டப் பாலமாக, நிலமட்டப் பாலமாக 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே சிறு பாலத்தைக் கட்டி அங்கே போக்குவரத்து வசதி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதிலே 2 வெண்டட்காஸ்வே ஓடு பாலங்கள் இருக்கின்றன. அதை தரைமட்டப் பாலமாக மாற்ற வேண்டும் என்றாலும் மதிப்பீடு அதிகமாகும். ஏற்கெனவே அவரே தெரிவித்து இருக்கிறார், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று. ஆகவே, இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொருத்துத்தான் அதைப் பரிசீலனை செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 67, திரு. எம்.பி. சேகர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

67—

கூவம், பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்தும் திட்டம்

14379-டாக்டர் எம்.பி. சேகர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கூவத்தை, பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்தும் திட்டத்தை மறுபடியும் அரசு பரிசீலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: ஸமாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில், நீர் வழிப்பாதைகளான கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றைச் சுற்றுப்புற சூழ்நிலையின் அடிப்படையில் சீரமைக்கத் தேவையான திட்ட மதிப்பீட்டினைத் தயாரிக்கும் பணியை ஸெவர்ன் ட்ரெண்ட் என்ற யு.கே. (United Kingdom) இண்டர்நேஷனல் நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்து உள்ளது. இந்த நிறுவனத்தின் இறுதி அறிக்கையும் பரிந்துரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், சென்னைப் பெருநகர் அபிவிருத்திக் குழுமம், அதாவது எம்.எம்.டி.ஏ. சென்னை பெருநகர் 'வெள்ள நிவாரணம்' என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஒரு திட்ட அறிக்கை தயார்க்கும் பணியை திருவாளர்கள் மெக்டொனால்டு